# IN THE COURT OF THE SPECIAL DISTRICT COURT (MACT), DHARMAPURI

**MCOP.No. 803/2025**

**P.W.1. Muthu**

**DATE : 08.04.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்தில் என் அப்பா பெருமாள் இறந்துவிட்டார். விபத்து சமயத்தில் என் அப்பாவிற்கு 65 வயது இருக்கும் என்றால் சரிதான். அதிக இழப்பீடு பெற மனுவில் என் தந்தையின் வயது 55 என்று குறைத்து காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் மனுதாரர் என் அப்பாவின் முதல் மனைவி. 2ம் மனுதாரர் என் அப்பாவின் 2ம் மனைவி. 4ம் மனுதாரர் என் தம்பி. நான் மற்றும் 4ம் மனுதாரர் 1ம் மனுதாரரின் மகன்கள். விபத்தை நான் நேரில் பார்க்வில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் அப்பா ஓட்டி சென்ற XL வாகனம் அவருக்கு சொந்தமானது. என் அப்பா ஓட்டி சென்ற இரண்டு சக்கர வாகனத்தின் பதிவு சான்று, காப்பீடு சான்று மற்றும் என் அப்பாவின், ஓட்டுநர் உரிமம் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் அப்பா இரண்டு சக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி சென்று வலது புறத்தில் இருந்து இடது புறமாக சென்றதால் தான் விபத்து நடந்துள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு என் அப்பாவின அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணம் என்றால் சரியல்ல. விபத்து குறித்து என் அப்பாவின் மீது முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பா தீங்கிழைத்துவா் என்பதால் மனுதார்கள் இழப்பீடு கேட்க முடியாது என்றால் சரியல்ல விபத்திற்கு பஜாஜ் பிளாடினா வாகன ஓட்டுநர் காரணமல்ல என்றால் சரியல்ல. விபத்தில் பஜாஜ் பிளாடினா வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்த நபர் தான் பாதிக்கபட்டுள்ளாா் என்றால் சரிதான். என் அப்பா 24.12.2024 அன்று சிகிச்சை பலனின்றி தருமபுரி அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார். என் அப்பாவிற்கு சிகிச்சை அளித்தற்கான மருத்துவ அறிக்கை மற்றும் டிஸ்சார்ஜ் சம்மரி ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பாவின் தொழில் மற்றும் வருமானம் நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும் 4ம் மனுதாரருக்கும் திருமணமாகிவிட்டது. என் தந்தையின் வருமானத்தை சார்ந்து மனுதாரர்கள் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரா் வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் காப்பீடு விதிமுறைகளை மீறியுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு செலுத்த வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ANGAPPAN SRINIVASAN RAJA

Digitally signed by ANGAPPAN SRINIVASAN RAJA
Date: 2026.04.08 17:50:41 +0530

**IN THE COURT OF THE SPECIAL DISTRICT JUDGE(MACT), DHARMAPURI**

**MCOP. No. 803/2025**

| | |
|---|---|
| DEPOSITION OF WITNESS OF | : PW 2 |
| NAME OF THE WITNESS | : Saravanan |
| FATHER'S / HUSBAND'S NAME | : |
| VILLAGE | : |
| TALUK | : |
| RELIGION | : |
| CALLING | : |
| AGE | : |

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act X of 1873 of the day of 08th April 2026.

**முதல் விசாரணை : *(மனுதாரர் தரப்பில்)***

நான் இந்த வழக்கில் 3ஆம் தரப்பினர். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விவரங்களும் உண்மை. அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ளுபடி கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை : *(2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)***

இவ்வழக்கில் சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி சம்மன் வரவில்லை என்றால் சரிதான். 3ம் மனுதாரர் முத்து

அழைத்ததால் சாட்சி சொல்ல வந்துள்ளேன். முத்து என் ஊர்க்காரர். *19.12.2024* அன்று மதியம் *1.15* மணியளவில் கம்பைநல்லூர் திப்பம்பட்டி சாலையில் அம்மன் ஷோரூம் அருகில் விபத்து நடந்தது. விபத்து சமயத்தில் பெருமாள் கம்பைநல்லூரில் இருந்து திப்பம்பட்டி நோக்கி சூப்பர் XL வாகனத்தில் சென்றார். பெருமாள் தலைகவசம் அணியவில்லை என்றால் சரிதான். பெருமாளுக்கு பின்னால் 50மீ தொலைவில் நான் என் மோட்டார் சைக்கிளில் சென்றேன். பெருமாள் எனக்கு முன்னால் சென்ற விவரம் எனக்கு ஏற்கனவே தெரியாது. பெருமாள் வாகனத்திற்கு முன்னால் டாடா ACE வாகனம் சென்றது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் பெருமாள் சாலையின் வலது புறத்தில் இருந்து இடதுபுறமாக அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று பிளாடினா வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. பிளாடினா வாகனத்தில் ஒரு நபர் மட்டும் தான் பயணம் செய்தார். அவருக்கும் விபத்தில் காயங்ள் ஏற்பட்டது. நான் விபத்து நடந்த இடத்திற்கு செல்வதற்குள் அங்கு பொதுமக்கள் கூடிவிட்டார் என்றால் சரிதான். பெருமாளின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவு தான் விபத்திற்கு காணரம் என்றும் பிளாடினா வாகன ஓட்டுநர் காரணமல்ல என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பெருமாள் மீது பதிவு செய்த விவரம் என்கது தெரியாது. விபத்து குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. விபத்து வழக்கு சம்மந்தமாக நான் குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை.

காயமடைந்த பெருமாளை நான் மருத்துவமனையில் அனுமதிக்கவில்லை. மனுதாரர்கள் கேட்டுக் கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ANGAPPAN SRINIVASAN RAJA

Digitally signed by ANGAPPAN SRINIVASAN RAJA
Date: 2026.04.08 17:50:47 +0530